செய்தி வெளியீடு எண்:123 நாள்:21.05.2021

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (21.05.2021) மதுரை மாவட்டம், தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கைகள் கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார்.**

மதுரை மாவட்டத்தில் 07.05.2021 முதல் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த பல்வேறு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 15.03.2021 முதல் இன்று வரை 3,63,599 நபர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு, நோய்த் தொற்று பாதிப்புக்குள்ளான 30,521 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டதன் விளைவாக 18,564 நபர்கள் பூரண குணமடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கொரோனா பெருந்தொற்று பரவாமல் கட்டுப்படுத்திட மதுரை மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு, மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 1,101 படுக்கைகளும், ஆக்ஸிஜன் வசதி அல்லாத 646 படுக்கைகளும், தனியார் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 1,131 படுக்கைகளும், ஆக்ஸிஜன் வசதி அல்லாத 794 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் 2,620 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதமலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (21.05.2021) மதுரை மாவட்டம், தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கைகளில் முதற்கட்டமாக 200 படுக்கை கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தினை திறந்து வைத்து ஆய்வுச் செய்தார். அப்போது, இம்மையத்தில் உடனடியாக

கொரோனா தொற்று நோயாளிகளை அனுமதித்து உரிய சிகிச்சை அளித்திட மாவட்ட நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு திருப்பூர் எவரெடி ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சரவணகுமார் அவர்கள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையும், பாரமௌன்ட் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.எம். ராம் அவர்கள் 30 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், சுதா மருத்துவமனை சார்பில் மருத்துவர் சுதாகர் அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், தேவதாஸ் மருத்துவமனை சார்பில் மருத்துவர் சதீஷ் தேவதாஸ் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வுகளின்போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி கருணாநிதி, திரு. சு. வெங்கடேசன், மதுரை வடக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.எஸ்.விசாகன், இ.ஆ.ப., மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**